# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.86/2024** **நாள் :18.12.2024**

**சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில், கீழ்ப்பாக்கத்தில் செயல் பட்டுவரும் புதிய பரிசோதனைக் கூடத்திற்கு National Accreditation Board For Testing And Calibration Laboratories (NABL) என்ற தேசிய அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.**

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் கீழ்ப்பாக்கத்தில் ரூ.7.05 கோடி மதிப்பீட்டில், குடிநீர் மற்றும் கழிவுநீரின் தரத்தை நவீன முறையில் பரிசோதிக்க புதிய பரிசோதனைக் கூடம் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. சென்னை குடிநீர் வாரியம், தரமான குடிநீர் வழங்குதல் மற்றும் பாதுகாப்பான முறையில் கழிவுநீரகற்றும் பணிகளை மேற்கொள்வதோடு, குடிநீரின் தரத்தினை பரிசோதிப்பதை ஒருங்கிணைந்த பணியாக மேற்கொண்டு வருகிறது. இப்பரிசோதனை கூடம் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய உபகரணங்கள் மூலம் திறன்வாய்ந்த நீர்பகுப்பாய்வாளர்கள் உடன் செயல்பட்டு வருகிறது.

இவ்வாய்வகத்தில் IS10500 : 2012 & IS456 : 2000 தரவியல்படி முறையே குடிநீர் மற்றும் கட்டுமான தேவைக்கு பயன்படும் நீர் பரிசோதனை செய்யப்படுகிறது. தற்போது இப்பரிசோதனை கூடத்திற்கு National Accreditation Board For Testing And Calibration Laboratories (NABL) என்ற தேசிய அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

மேலும், அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்களில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு கட்டமைப்புகளின் மூலம் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மாதிரிகளை சென்னை குடிநீர் வாரிய கழிவுநீர் அமைப்புகளில் கலப்பதற்கு முன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தரத்திற்கேற்ப தரப்பரிசோதனை செய்யப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் மற்றும் கட்டுமான நிறுவனங்கள் தங்கள் வீடுகள், வணிக பயன்பாடு, அடுக்குமாடி குடியிருப்புகளில் பயன்படுத்தும் குடிநீர், வீடுகளில் உள்ள கிணறுகள் மற்றும் ஆழ்துளை நீரின் தரம், கட்டுமான தேவைக்கான நீர் மாதிரிகள் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மாதிரிகளை இந்த நவீன பரிசோதனை கூடத்தில் பரிசோதனை செய்து பயன்பெறலாம்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள

CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in